
உலகில் வள்ளலாரின் புதுமையான
அருளரசாட்சி



# திரு அருட்பிரகாச வள்ளலார்
# சுவாமி ராமலிங்கம்

## ஆசிரியர் படைத்துள்ள ஆங்கில நூல்கள்

1. **ARUT PERUM JOTHI & DEATHLESS BODY**
   in Two volumes with 2000 Pages Published by the University of MADRAS, CHE PAUK, MADRAS - 600 005.
   (A Comparative Study of Swamy Ramalingam with Sri AURO BINDO and The Mother and Tirumoolar)

2. **VALLALAR'S VISION of NUCLEAR PHYSICS AND THE NERVOUS SYSTEM**
   Published by the International Society for the Investigation of Ancient civilisation under the Patronage of
   Dr. N. Mahalingam
   Ramalinga Mission,
   102, Mount Road, Guindy,
   CHENNAI - 600 032.

3. **THE MOTHER - UNO - VALLALAR**
   (Supramental Evolution Since 1874) Published by
   AURO - MA - RAMALINGAM TRUST,
   33, Mahal 4th Street, MADURAI - 625 001
   Ph : 0452 - 736235.

**Price : Rs. 100**

இதன் தமிழ் ஆக்கம் அச்சில் உள்ளது.

# உலகில் வள்ளலாரின் புதுமையான அருளரசாட்சி

( டி. ஆர். துளசிராம். *ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், பாண்டிச்சேரி* )

வள்ளலார் 1874 ஜனவரியில் தம் இறவா உடல் சித்தி எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு, நம்புவதற்கு அரிய வாக்குறுதிகளை அளித்துள்ளார். அவையாவன :- 1) நான் இந்த உடலில் இருக்கிறேன். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்து கொள்வேன். 2) நான் என் தனி அறையில்இருந்து கொண்டு என் உடலைக் காணாதபடி கரைத்துவிட்டு அதே சமயம் எங்கெங்கும் எவ்வுலகிலும் இருப்பேன். 3) அருட்பெருஞ்ஜோதிப் பேராண்டவர் இந்நிலவுலகில் நேரடியாக வெளிப்பட்டு விளங்கும்படி வந்து நிலை கொள்வார். 4) அப்போது நானும் இறவா முத்தேக வடிவு உடலுடன் மறுபடி திரும்பி வருவேன். 5) மேலும், அகவினத்தார்க்கு அதாவது மகான்களுக்கு சாகாவரமும் ஏனையோர்க்கு பக்குவம் வரும்படி பரிபாக நிலையும் அளிப்பேன் - என்றார். ஆண்டவருடன் பூரணமாகவும் உடலளவிலும் ஒன்றிய வள்ளலாரின் வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பதற்கு ஏதுவாக வடலூரில் 30-01-1874 முதலாக அருட்பெருஞ்ஜோதிப் பேராண்டவரே நேரடியாக வந்து நிரந்தரமாக என்றும் தங்கி வீற்றிருக்கலானார். (சபை விளம்பரம் அறிக்கை பார்க்க).

அச்சமயம் பார்த்து 30-01-1874 நள்ளிரவில் சீடர்களிடம் விடைபெற்று தம் தனி அறையில் இருந்து தம் இறவா உடலை யாரும் காணாதபடி கரைத்துவிட்டு, அதே சமயம் கரைத்த நுண்ணிய தாதுப்பொருட்களுடனும் அருட்சக்தியுடனும் உலகில் எல்லோரது உடல்களிலும் மறைவாகப் புகுந்து கொண்டதுமன்றி, அவ்வுடற்சூழலில் எல்லாம் அருட்சக்தி வெளிப்படையாக உணரும்படியாகவும் புகுந்து கொண்டார். ஆண்டவரின் முன்னிலையிலேயே அவர் மறுபடியும் சில நாட்களுக்குள் அருட்ஜோதி வெளிப்பட்டுச் சூழ்ந்த புது இறவா உடலைச்

சிருட்டித்துக் கொண்டு, நம்மிடையே 1874 – பிப்ரவரி முதலாக இறைமய தூல உலகில் வாழ்ந்து வருகிறார். அரவிந்த ஆசிரமத்து அன்னைக்கு பாரிஸில்1906–லிலும் எனக்கு பாண்டிச் சேரியில் 1981–லிலும் ஒளிமய புது உடலில் வந்து வள்ளலார் காட்சி அளித்துள்ளார். ஆனால் அவர் வாழ்ந்த போது பலர் 1872–73ல் அவருடைய நிழலற்ற உடலைப் பார்த்து அது இறவா உடல் என அதிசயித்தனர்.

அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைத்ததன் மூலமாக ஆண்டவரின் திருவுளத்தையும் "*அருளரசாட்சி இயற்றுக*" என்ற கட்டளையையும் சிரமேல் தாங்கி சிரத்தையுடன் செயல்படுத்தி உள்ளார். இன்றும் செயல்படுத்திக் கொண்டே வருகிறார் என்பது கண்கூடு. "*அருள் ஒளி அடைந்தனை அருளமுது உண்டனை ... அருள் நிலை பெற்றனை அருள் வடிவு உற்றனை அருளரசு இயற்றுக*" என்று ஆண்டவர் ஆதரவுடன் வள்ளலாருக்குக் கட்டளை இட்டார்; அருளரசாட்சிக்காக அருட்ஜோதி மாமகுடமும் சூட்டி வைத்தார். (ஜோதி அகவல் வரி 508–9, 565).

முதல் மூன்று வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதன் பயனாக, நம் எல்லோரது தனித்தனி உடலின் சூழலில் ஞானப் பெருவெளியின் அருட்சக்தி விளங்கும்படி வள்ளலார் 1874 ஜனவரி இறுதியில் 31ந் தேதி முதலாகவே கொண்டு வந்துள்ளார். இன்று பிறக்கும் குழந்தைக்கும் கூட அவ்வாறே செய்து வருகிறார். நம்முடைய போட்டோ படத்தில் நம் ஜட அஞ்ஞான மய உடலை முதலில் 1–2 நிமிடம் வரை தொட்டும் பார்த்தும் முடித்தபின், அதன் சூழலைத் தொட்டாலும், பார்த்தாலும் உடனே மிக உயரிய இறை அருட்சக்தியை (வடலூர் ஞானசபை படத்தில் இருப்பது போன்ற சக்தியை) உணரலாம். வள்ளலார் மக்களிடையே இறை

அருளரசாட்சியைக் கொண்டு வருவதற்கு 1874 ஜனவரி – பிப்ரவரி முதலாக செயல்படுத்தி வரும் முதல் அருட்செயல் எனலாம். அவர் சொல்லிய படி, ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செய்து கருணை காட்ட, இது உதவும்.

நம் உள் உடலுக்குள்ளும் மறைவாக வள்ளலார் புகுந்து கொண்டிருக்கிறார் என்பதை அரவிந்த ஆசிரமத்து அன்னைக்கு ––– நான் அந்த ஆசிரமத்தில் சேர்ந்த வருடத்தில் ––– 1969–ல் ஏற்பட்ட அனுபவத்தால் அறிகிறோம். நிழற்சாயை இல்லாத பொன்னொளியை அன்னையின் உடலுக்கு, வள்ளலாரே "*உருவமற்ற*" ஒரு மாமனிதனாக வந்து ஆனால் மறைவாக நின்று அருளினார். அவ்வாறு பொன்னொளியுடன் வந்து அருளியவருக்கு இயல்பாகவே "*எல்லா உடல்களும் தானே*" என்னும்படி சொந்தமாக இருக்கிறது என்று அன்னை கூறியுள்ளார். "*எல்லா உலகும் என் வசம் ஆயின. எல்லா உயிர்களும் என் உயிர் ஆயின ...*" என்றும், "*தன் பொருள் அனைத்தையும் ... தன் வடிவு அனைத்தையும் தன் அரசாட்சியில் என் வடிவாக்கிய என் தனித் தந்தையே*" என்றும் "*தன்னையும் தன் அருட்சக்தியின் வடிவையும் என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே*" என்றும், "*என்னுடல் என்னுயிர் என் அறிவெல்லாம் தன்ன என்றாக்கிய தயவுடைத்தாயே*" என்றும் வள்ளலார் அருட்பாவில் ஜோதி அகவலில் பாடியிருப்பதால், அவருக்கு எல்லா உடல்களும் தன் உடலாயின என்னும்படி அருள் வடிவ நிலை அமைந்து விட்டது. ஆகவே அவர் நம் உள்ளத்திற்கு மாத்திரமன்றி, நம் உடலுக்கும் நேரடியாக அருளையும் அருட்சக்தியையும் அருளுகிறார். அவர் படத்தையும் உணவையும் ஒரே சமயத்தில் தொட்டால் உணவிலும் அருட்சக்தி ஊட்டி அதன் மூலமாகவும் நம் உடலுக்கு அச்சக்தியை நிரந்தரமாக அருளுகிறார். இது ஆன்மாவை உணர வழிவகுக்கும். இது அவர் நடத்தும் அருளரசாட்சியின் செயற்பாடு எனலாம். மேலும், நம்கையின்

அருட்சக்தியால் பலதரப்பட்ட மகான்களின் உடல் அருட்சக்திகளைப் பார்த்தும் ஒப்பிட்டு உணர்ந்தும் மதிப்பிடலாம்.

1874 முதலாக பலதரப்பட்ட மக்களை எல்லாம் கூட்டாக அருளும் பொருட்டும், ஆன்மநேய அடிப்படையில் உலக ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஏற்படவும், வாழ்க்கையின் பலதுறைகளிலும் ------ உதாரணமாக, அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், விஞ்ஞானம், நுண்கலைகள், வியாபாரம், தொழில்கள், தகவல் தொடர்பு முறைகள், மதங்களின் சமரசம் முதலிய துறைகளில் நடக்கும் பலதேச அல்லது சர்வதேச மகாநாடுகளிலும், அணி சேரா நாடுகளின் மகாநாடுகளிலும், ஒலிம்பிக் விளையாட்டு அரங்குகளிலும் வள்ளலார் நேரடியாக வந்து அருட்சக்தியை அருளி தன் சாந்நித்தியம் விளங்கும்படி செய்கிறார். அம்மகாநாடுகளின் கூட்டங்களில் உலகியலும் ஆன்மீக இயலும் இணைந்த வாழ்வு முன்னேறுவதற்கு நல்ல தீர்மானங்களையும் முடிவுகளையும் சிந்தித்து எடுக்க உதவுகிறார் என்று தெரியவருகிறது. உலக நாடுகளின் ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையிலும் அதன் கிளை நிறுவனங்களிலும் அவருடைய அருட் சக்தி பூரணமாக விளங்குகிறது. வடலூரிலுள்ள சத்ய ஞானசபைக் கோயிலில் அதே சக்தி உள்ளது. தனி மனிதனையும் ஐ.நா. பொதுச்சபையையும் இணைப்பது வள்ளலாரின் அருட் சக்தியேயாகும். ஒருவரின் போட்டோ படத்திலிருக்கும் புறச் சூழலாகிய நான்கு மூலைகள் தொட்டும் பார்த்தும் அச்சக்தியை உணரலாம். இச்சக்தி நம் உடலுக்குள் வருவதற்கு மேற்சொல்லிய முறையில் உணவு அருந்தினால் போதும். சைவ உணவு இவ்வாறு உண்டால் உடலுள்ளும் சூழலிலும் இன்னும் மேலான சச்சிதானந்த அருட் சக்தி விளங்கும். அருளரசாட்சி மக்களிடையே ஏற்படுவதற்கு இது எளிய வழியாகும். யதேச்சதிகார "விடோ" ஓட்டுரிமை கொண்ட ஐந்து வல்லரசுகளின் சுய நல ஆதிக்கத்தால் ஐ.நா. பந்தோபஸ்து சபையில் மாத்திரம் வள்ளலாரின் அருட்சக்தி அவ்வளவாக விளங்கவில்லை.

ஐந்து நாடுகள் சுயநலத்தைவிட்டு விடவும் மற்ற எல்லா நாடுகளுடன் நல்லிணக்கம் ஏற்படவும் வள்ளலார் வழிவகுத்துக் கொண்டிருக்கிறார் என்பது நிச்சயம்.

ஐ.நா. நிறுவனம் தோன்றிய 1945ம் வருட முதலாக அதன் பொதுக்காரியதரிசி பதவிக்கு யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவரின் உடலிலும் அதே அருட்சக்தியை வள்ளலார் நேராக அருளி வருகிறார். ஆனால் அண்மைக் கால முதல் --- ஒளிமய வள்ளலாரின் அருட்ஜோதி சூழ்ந்த முழு உருவப்படம் எனக்குக் காட்சியளித்தவாறு வெளியிட்ட வருடம் 1996 முதலாக --- இந்திய நாட்டின் சில அரசியல் தலைவர்களுக்கும், பிரதமமந்திரி, ஜனாதிபதி இவர்களுக்கும், அருட்சக்தியை உடலிலும் அருளி வருவதால் வள்ளலார் அருளரசாட்சியை அரசியலிலும் செயல்படுத்தி வருகிறார் எனத் தெரிகிறது. இது போன்று சங்கீதம், நாட்டியம் போன்ற நுண்கலை வல்லுநர்கள் சிலருக்கும் சில விஞ்ஞானிகளுக்கும் அருளி வருகிறார். அதன் விளைவுகளும் பயன்களும் காலப்போக்கில் தெரியவரும்.

வள்ளலார் அருளரசாட்சியை கால, தேச (இடம்), வர்த்தமானங்களை (செயல்படும் நிகழ்ச்சிகளை) அனுசரித்தும், இயற்றிவருகிறார். தைப்பூசம் மற்றும், மாதப் பூச நட்சத்திர நாளிலும், அவர் பிறந்த நாளிலும், அருட் சக்தியை 24 மணி நேரமும் உலகம் பூராவும் பரப்பி, ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்திலும் தங்கி அனைவரையும் "***அணவுறு பேர் அருட்சோதியால்***" அணைத்துத் தழுவி அருளுகிறார். அந்நாட்களில் நாம் செய்யும் தவமும், வழிபாடும், சேவையும், தியானமும், பூசையும், ஜபமும் உயரிய இறைநலப் பயனை எளிதாக அளித்து வருகிறது. ஒருவனது ஜன்ம நட்சத்திர நாளில் சிறப்பாக அவனுக்கு அருளை வழங்கி ஆன்ம உணர்வு விழிப்படையச் செய்கிறார். தினந்தோறும் கூட குறிப்பிட்ட நேரங்களில் பகல் 11–45 முதல் 12–15 மணி அளவிலும் இரவு 7–30

முதல் 8–00 மணி அளவிலும் அருட்சக்தியை உலகெங்கும் பரப்பி மேற்சொன்னவாறு பயன்படும் செயல்களில் நிகழ்வுகளில் பங்கு கொள்ளச் செய்து அருளுகிறார். "*உலகெலாம் பரவ என்னுளத் திருந்தே அலகிலா ஒளி செய் அருட் பெருஞ்ஜோதி*" என ஜோதி அகவலில் பாடி உலகுக்கு அருள் செய்து வருகிறார். அவர் சிறப்பாக அருளியுள்ள மகான்களின் பிறந்த நாட்களில் பகல் நேரங்களிலும், மாலை தியான நேரங்களிலும் அருட் சக்தியை பரவலாக கொண்டு வந்து அருளுகிறார். இவை சிறப்பான காலங்களைத் தழுவி செயல்படும் அருளரசாட்சியாகும். அந்நேரங்களில் ஒளிமய இறவா உடலைப் பெற்ற பின் வள்ளலாருக்கு கடைசியாக ஆண்டவர் கொடுத்த "*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி*" என்னும் மந்திரம் 15–20 நிமிடம் ஓதி மற்றும், குறிப்பாக அவர் படம் தொட்டு, உணவும் பழவகைகளும், பஞ்சாமுதம் போன்ற பிரசாதங்களும் அதே சமயம் தொட்டு அமுத உணவாக்கி அருந்தினால், நம் உடலில் இறவா உடலின் அருட்சக்தியை படிப்படியாகக் கொண்டு வந்து அருளுகிறார். இவ்வாறு படமும் பொருளும் தொட்டு அமுதப் பொருளாக்கி அருட்சக்தியை ஏற்றியபால், தேன், சர்க்கரைப்பாகு, நெய் அல்லது இனிப்புப் பழச்சத்து, பழரசம், கொண்டு ஆண்டவரை நினைந்து பாலுறுப்பில் பூசி போகம் செய்தும் பெறலாம். இது அவரின் சன்(சத்) மார்க்க வழிகளில் ஒன்றாகும். இது சாகாக்கலை அல்லது கல்வியுமாம். வள்ளலாரை வழி படும் ஒருவனது குடும்பத்தில் அனைவருக்கும் மனைவி மக்களுக்கும் குழந்தைகளுக்கும் அருட்சக்தியை உடலளவிலும் அருளி வருகிறார். மணிமுடியும் சூட்டி ..... நானும் தானும் ஒரு வடிவாகி தழைத் தோங்கப் புரிந்தே, அணவுறுபேர் அருட்சோதி அரசு கொடுத்தருளி, ஆடுகின்ற அரசே என வள்ளலார் வாழ்த்துகிறார்.

(அருள் விளக்க மாலை பா – 99)

மேலே சொல்லியவாறு ஐ.நா. நிறுவனங்களிலும், ஒலிம்பிக் அரங்கிலும், மற்றும் பல தேச அல்லது சர்வதேச மகாநாடுகள் கூடும் இடங்களில் செயல்படும் அருளரசாட்சியைப் பார்த்தோம். புதிதாக உருவாக்கப்படும் நகரங்கள் முழுவதிலும், உதாரணமாக, அரோவில், நெய்வேலி, வர்ஜி'னியாவில் யோகவில்லி, நியூயார்க்கில் ஐ.நா. நிறுவன இடமாகிய மன்ஹாட்டன் பகுதி, முதலிய புது நகரங்களில் அருளரசாட்சி ஓங்கி அந்நகர மக்களை எல்லாம் அருளை நேரடியாக எந்நேரமும் உணரச் செய்கிறது.

நான் எழுதிய "*அருட்பெருஞ்ஜோதியும் இறவா உடலும்*" என்னும் விரிவான ஆங்கில நூலை சென்னை பல்கலைக் கழகம் வெளியிட்ட அதே வருடத்தில் 1981–ல் வள்ளலார் கருணையுடன் நான் தங்கிய ஆசிரம வீட்டிற்கு வருகை தந்து என் படுக்கை அறையில் தரையில் நின்றவாறு, தலை உச்சி முதல் அடிப்பாதம் வரை உடலிலிருந்து வெண்மையான அருட்ஜோதி வெளிப்பட்டு ஒளி அலைகளால் சூழப்பெற்ற புது இறவா உடலுடன் எனக்குக் காட்சி அளித்தார். தரையையும் அருட்ஜோதி வெளிவந்து தொட்டது. அங்கு தரையிலும், அதற்கு நேராக அறையின் உச்சியான மேல்தள முகட்டிலும் இறவா உடலின் ஆற்றல் மிக்க தீவிர அருட்சக்தியை வள்ளலார், சித்திவளாகத்திலும் தனது தனி அறையிலும் இருப்பது போன்ற சக்தியை, நிரந்தரமாகப் பதித்துவிட்டார். பின்பு என் அப்பா டி.கே. ராமாவின் அறைக்கு நடக்காமலே ஒளி அலைகளால் உந்தப் பெற்றவாறு சென்று அவருக்கும் அருள் செய்து அங்கும் தரையிலும் மேல் தள உச்சி முகட்டிலும் அருட்சக்தியைப் பதித்து விட்டு என் அறைக்கு திரும்பி வந்து காட்சி கொடுத்த பின் மறைத்தார். மறுநாள் ஆசிரமத்து அன்னை வந்து எனக்குக் காட்சி கொடுத்து அருட்பெருஞ்ஜோதி மந்திரம் என் உள்ளத்தில் பதியும்படி அருளிச் சென்றார். நான் குடும்பத்தில் இருந்தபோதே எனக்கு ஆனந்தமய அருட்ஜோதியின் காட்சி, 1957–ல் கிடைத்தது. இக்காட்சிகளின் பயனாக வள்ளல்

பெருமான் என்னை ஒரு கருவியாக ஆட்கொண்டு என் மூலமாக அரவிந்த ஆசிரமத்தில் "*சுப்ராமெண்டல்*" எனப்படும் சிதம்பரஞானப் பெருவெளியின் சிற்சபை அருட்ஜோதி சக்தியை 1989–லிலும், சச்சிதானந்த அருட்சக்தியை 1992–லிலும் கொண்டு வந்தார் ––– அரவிந்தர் அன்னை படங்களை வள்ளலாரின் சாதாரண படத்துடன் என் ஆசிரம வீட்டிலேயே ஒரே சமயத்தில் தொட வைத்து அதாவது, 1989ல் தலையும் இதயமும், 1992ல் தலையும், பாதமும் தொட வைத்து அதன் மூலமாக அவர்களிருவருக்கும் வள்ளலார் அருளி அரவிந்த ஆசிரமத்திலும் அந்த அருட்சக்திகளை கொணர்ந்து நிலைபெறச் செய்தார். ஆகவே, அரவிந்தர் அன்னை இவர்களின் லட்சியத்தை வள்ளலாரே முன் வந்து அற்புதங்களை நிகழ்த்தி நிறைவேற்றி அவர்களுடன் உலகில் அருளரசாட்சி அமைப்பதில் ஒத்துழைத்து வருகிறார். 1956–ல் உலகின் சூட்சுமப் பகுதிக்கு ஸ்ரீ அன்னை பொற்சபையின் கீழ் பகுதியிலிருந்து கொண்டு வந்த ஒளி தூலப்பகுதியை அடையவில்லை, ஆசிரமத்திலும் அது நிலை கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், 1994–ல் ஒரு நாள் என் படுக்கை அறையில் வள்ளலார் நின்று காட்சியளித்த இடத்திலே நான் நின்று தியானம் செய்தேன். அவ்விடத்திலுள்ள இறவா உடலின் பேரருட் சக்தி என் கால்கள் வழியாக உடலில் பூராவும் புகுந்து நிறைந்து மனமும் அமைதியடைந்து, இதயத்தில் வள்ளலாரின் ஒளிமய சிறுவடிவம் புகப்பெற்றேன். அவர் திருவுளப்படி அதே நிலையில் ஆசிரமம் சென்று அமிர்தா ஆபிஸ் அறையில் சேரில் உட்கார்ந்ததும் அங்கு தரையிலும் நேர் உச்சியான மேல் தளமுகட்டிலும் அதே சக்தியைப் பதித்து, தியான அறையிலும் வரவேற்பு அறையிலும் அதைப் பரப்பி இவ்வாறு ஆசிரமத்தில் முதன் முதலாகக் கொண்டு வந்து நிலை பெறச் செய்தது ஒரு அற்புதச் செயலாகும். இவற்றைப் பற்றி எழுதி "*ஸ்ரீ அன்னை –– ஐ.நா. சபை –– வள்ளலார்*" என்னும் ஆங்கில நூலில் எனது காட்சியில் வந்த வள்ளலாரின் அருட்ஜோதி சூழ்ந்த

இறவாப் புது உடலின் படத்தை தொட்டும் பார்த்தும் அச்சக்தியை உணரும் பொருட்டு 1996–ல் முதன் முதலாக வெளியிட்டேன். இப்படத்தின் மூலமாக உலகில் அருளரசாட்சி வளர வள்ளலாரே வழி வகுததார். இறவா உடலின் அருட்சக்தியை, "*ஜோதி அகவலை*" ஓதியும் அல்லது அதன் காஸட்டில் கேட்டும் எளிதாகப் பெறலாம். அக்காஸட்டைப் பார்த்தும் உணரலாம். இச் சக்தியானது சிதம்பர சிற்சபை, சச்சிதானந்தம், பரம் பொருள் இம் மூன்றும் அருட்பெருஞ் ஜோதியால் இணையப் பெற்ற பேர் அருட்சக்தியாகும். காந்தக் கற்களை அளவுகோலாக அமைத்து, எந்த ஒரு மகான், சித்தர், யோகி, ஞானி, அவதாரங்கள், வேத கால ரிஷிகள், மதத்தலைவர்கள் --- இவர்களின் உடலின் தூல அருட்சக்திகளைக் காட்டிலும் வள்ளலார் உயர்வற உயர்ந்த இறவா உடலின் இறைமய அருட்சக்தியைப் பெற்றார் என இந்நூலில் முதன் முதலாக காந்தக் கல் படங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், இது வள்ளலாரின் சாதாரண முழு உருவப் படத்தைக் கொண்டும், ஒளி சூழ்ந்த புது உடலின் முழு உருவப்படத்தைக் கொண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரவிந்தரின் 125–வது பிறந்த நாளான 15–08–97 முதலாக (சமாதிநீங்கலாக) ஆசிரமம் பூராவிலும் ஒப்பற்ற இறவா உடலின் அருட்சக்தியே விளங்கிக் கொண்டிருக்கிறது. இது வள்ளலாரின் பேரருள் அரசாட்சியின் முதற் செயற்பாடு எனலாம். மேலும், ஏப்ரல் 1950–ல் கடைசியாகப் பிடித்த அரவிந்தரின் போட்டோ படத்திலும் 5–7–69ல் பிடித்த அன்னையின் படத்திலும் இதே அருட்சக்தி புதிதாக விளங்குகிறது. இதன் பயனாக அருளர சாட்சியில் ஒரு புது சகாப்தத்தை வள்ளலார் உருவாக்கிவிட்டார். நான் வள்ளலாரின் ஒளிமய இறவாப்புது உடலின் படத்துடன் எந்த ஒரு பெரிய மகானின் படத்தை சேர்த்துத் தொட்டதும் உடனே அம்மகானுக்கு இறவா உடலின் அருட்சக்தியை வள்ளலார் அருளி அவரின் படத்திலும் ஆசிரமத்திலும் ஆசிரம உணவிலும் வழிபடு கோயிலிலும் அச்சக்தி விளங்கும் படி அற்புதம் நிகழ்த்தி வருகிறார். வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களான சத்ய சாயிபாபா, கொல்லம்

அமிர்தானந்தமயி, திருவண்ணாமலை யோகி ராம்சூரத்குமார், காஞ்சங்காடு ஆனந்தாசிரமத்து சச்சிதானந்தசுவாமி, மற்றும் திண்டுக்கல் சரவணானந்த சுவாமி இவர்களின் படங்களை ஒவ்வொன்றாக மேலே சொல்லியவாறு 1997 அக்டோபர்–நவம்பரில் என் ஆசிரம வீட்டிலிருந்து கொண்டு தொட்டேன். அதன் பயனாக வள்ளலாரின் இறவா உடலின் அருட்சக்தி அவர்களின் முழு உடல்களிலும் ஆசிரமங்களிலும் நிரந்தரமாகப் புகுந்து குடி கொண்டது. புதிதாகப் பிடிக்கும் அவர்களின் போட்டோ படங்களில் இச்சக்தியே விளங்குகிறது. நேரில் சென்று பார்த்தும் கடிதங்கள் எழுதியும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். சுருக்கமாகச் சொன்னால், வள்ளலார் தாம் வாக்களித்தபடி, முத்தேக ஒளிமய புது இறவா உடலில் வந்து இந்த மாகன்களுக்கு சாகாவரம் அளித்துள்ளார். ஆகவே இவர்கள் அருட்ஜோதியை உடலிலும் பெற்று, அது தெய்வீகத்தரமாக மாறி இறவா உடலை அடையும் வாய்ப்பு உள்ளது.

இதே போன்று மகாசமாதியடைந்த பெரிய மகான்களான மதுரை நடன கோபாலநாயகி சுவாமி, இராமகிருஷ்ணர், ரமணமகரிஷி, திருமூலர், ஆனந்தாசிரமத்து இராமதாஸ், மாதாஜீ கிருஷ்ணாபாய், மகாத்மா காந்தி, தியாகராஜ சுவாமி, உ.பி. மாநிலம் ஷாஜஹான்பூர் ராமச்சந்திரா முதலியோரது படங்களை வள்ளலாரின் ஒளிமய படத்துடன் தொட்டேன். அவர்களின் கடைசிப் போட்டோ படங்களிலும் ஆசிரமங்களிலும், வள்ளலார் தம் சாதாரணப் படத்தில் இருப்பது போன்ற முத்தேக அருட்சக்திகளை, அதாவது ஞானப் பெருவெளியின் அருட்சக்தியை உடலிலும், சச்சிதானந்த அருட்சக்தியை அதன் சூழலிலும், இறவா உடலின் சக்தியை பெருவிரலிலும், கட்டைவிரலிலும், கண்களிலும், படத்தின் நான்கு மூலைகளிலும் முதலில் அருளுகிறார். ஆனால், நேர் தலை உச்சிக்கு மேல் சற்று உயர்ந்த வெளி இடத்திலும், அதே போன்று அடிப்பாதங்களுக்கு நடு நேராக சற்று கீழே உள்ள தரையிலும்

(அல்லது தரையை நோக்கியுள்ள வெளி இடத்திலும்) இன்னும் சிறப்பான அதிக அருட்சக்தி நிரந்தரமாக அருளுகிறார். சில நாட்கள் சென்றபின் இறவா உடலின் அருட் சக்தியை தன் ஒளிமய படத்தில் இருப்பது போன்று சமமாகப் பூரா உடலிலும், சூழலிலும், புறச்சூழலிலும் (அதாவது முத்தேகங்களின்) உள்ளும் புறமுமாகிய தூல, சூட்சம, காரண தேகங்களிலும் நிரந்தரமாக அருளுகிறார். இதன் பயனாக மேற்சொன்ன ஆசிரமங்களுக்குச் செல்லும் பக்தர்கள் உள்ளத்திலும் உடலிலும் அங்குள்ள இறவா உடலின் அருட்சக்தியை ஓரளவு கிரகித்துக் கொள்ள முடிகிறது. இதன் பொருட்டும் வள்ளலார் இம்மகான்களுக்கும் அருளி அருளர சாட்சியைப் பரவலாகக் கொண்டு வந்துள்ளார்.

இத்தகைய இறவா உடலின் அருட்சக்தியை மதித்து போற்றக் கூடிய ஒரு சில மகான்களால், உதாரணமாக ஆதிசங்கரர், திருவண்ணாமலை சேஷாத்திரி சுவாமி, வேதாந்த தேசிகர், சுந்தரமூர்த்தி நாயனார், சுவாமி விவேகானந்தர் போன்றவர்களால் தங்கள் படங்களில் அதாவது உடலில் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அவர்களின் படங்களை பலமுறை வள்ளலாரின் படத்துடன் விரும்பித் தொட்டும் கிரகித்துக் கொள்ளவில்லை. இதற்கு வெளிப்படையான காரணங்கள் இருக்கலாம்.

*"மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும் யாவரும் பெற்றிடா இயல் எனக்கு அளித்தனை. உலகுயிர்த் திரள் எலாம் ஒளி நெறி பெற்றிட இலகும் ஐந்தொழிலையும் யான் செயத் தந்தனை"* என ஜோதி அகவலில் பாடியிருப்பதால் அருளரசாட்சியை இன்னும் பரவலாக்க கோயில்களில் எல்லாம் வள்ளலார் இறவா உடலின் ஒப்பற்ற அருட்சக்தியை 1997 நவம்பர் முதலாகக் கொண்டு வந்துள்ளார். சிவன், விஷ்ணு, விநாயகர், முருகன், ஆஞ்சநேயர், முதலிய கோயில்கள் மற்றும் மீனாட்சி, காமாட்சி முதலிய. அம்மன் கோயில்கள் – இக்கோயில்களின் கோபுரபடத்தையாவது, மூலவர், உற்சவர் படங்களையாவது வள்ளலாரின் ஒளிமய இறவாப்புது

உடலின் படத்துடன் தொட்டதும், அக்கோயில்கள் முழுவதிலும், மூலை முடுக்குகளிலும் ஒளி விளக்குகளிலும், எல்லாத் தெய்வவிக்கிரகங்களிலும் உயரிய அருட் சக்தி விளங்கும்படி பொதுவாக அருளுகிறார். சிறப்பாக கோபுரத்தின் நுழைவாயிலிலும், அதன் மேல் மாடிகளிலும், கர்ப்ப கிரகத்திலும், மூலவரின் முழு வடிவிலும், அருகிலுள்ள வழிபாடு மண்டபத்திலும் வள்ளலார் இறவா உடலின் அருட்சக்தியே விளங்கும்படி அருளுகிறார். அக்கோயில் லட்டு முதலிய பிரசாதங்களின் மூலமாகவும் உடலுக்கு நேரடியாக இச்சக்தி கிடைத்துவிடுகிறது. கோயிலுக்குச் செல்லும் பக்தர்களை உள்ளமும் உடலும் ஒருங்கே தூய்மைப்படுத்தி அருளைக் கிரகித்துக் கொள்ளும்படி செய்கிறார். தமிழ் நாட்டிலுள்ள எல்லா முக்கிய கோயில்களின் கோபுர படங்களை (ஓம் சக்தி தமிழ் மலர் இதழ்களில் வெளியானவை) மற்றும் இந்திய நாட்டின் புகழ்பெற்ற கோயில்களின் படங்களை இவ்வாறு தொட்டு, அக்கோயில்களில் எல்லாம் வள்ளலாரின் ஒப்பற்ற அருட் சக்தி வெளிப்படையாக விளங்கும்படி கொண்டு வரப்பட்டது. மேற்சொன்ன மகான்களின் ஆசிரமங்களிலும், தெய்வங்களின் கோயில்களிலும் இருப்பது போன்று சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் மற்ற ஆலயங்களிலும் இவ்வழி முறையைப் பின்பற்றி எல்லா மதங்களைக் கடந்த ஒரே சீரான சமரசப்படுத்தும் ஒப்பற்ற இறவா உடலின் அருட்சக்தியைக் கொண்டு வரலாம். உலகில் எல்லா மக்களிடையே அருளின் ஆற்றல் மிக்க அரசாட்சி ஏற்பட இது இன்றியமையாததாகும். சர்ச்சு, மசூதி, போன்ற ஒரு ஆலயத்திற்கு நேரில் சென்று கருவறை வாசற் படியிலாவது அதன் சன்னதியிலாவது கற்பூர தீபம் அல்லது மெழுகுவர்த்தி அல்லது விளக்கு தீபம் ஏற்றி "*அருட் பெருஞ் ஜோதி*" மந்திரம் ஓதி வள்ளலாரை அல்லது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நினைத்து ஆலயம் முழுவதிலும் அருட்சக்தியைக் கொண்டுவர பிரார்த்தனை செய்தால் உடனே அவ்வாறு அருளுகிறார். இதுவும் ஒருவழி முறையாகும்.

அவதாரங்களுக்கும் வள்ளலார் அருளுகிறார். அயோத்தி ஜன்ம ஸ்தான கோயிலின் இராமர் விக்கிரக படமும், பேட்துவாரகைக் கோயிலின் கிருஷ்ணர் விக்கிரக படமும், சாரநாத் கோயிலின் புத்தர் விக்கிரக படமும் வள்ளலாரின் ஒளிமய படத்துடன் தொட்டதால், இந்திய நாட்டிலுள்ள எல்லா ராமர், புத்தர், கிருஷ்ணர் கோயில்களிலும் (மத்ரா கிருஷ்ண ஜன்மஸ்தானத்திலுள்ள மசூதியிலும்), உலகம் பூராவிலுமுள்ள எல்லா புத்தர், ராமர், கிருஷ்ணர் கோயில்களிலும் இறவா உடலின் அருட் சக்தி 1997– நவம்பர் முதலாக விளங்கி, சமரச அருளரசாட்சி ஓங்கச் செய்துள்ளது.

மேலும், இப்புனித ஆண்டு 1998 கிறிஸ்துமஸ் தினம் முதலாக உலகில் எல்லா சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் ஒரே சமயத்தில் மேலே சொல்லிய முறையில் ஒப்பற்ற அருட் சக்தி கொண்டு வரப்பட்டது. இதற்குக் காரணம் பின் வருமாறு. 25–12–98ல் கிறிஸ்துமஸ் வழிபாட்டு விழாவும் ரம்ஜான் மாதமுதல் வெள்ளிக் கிழமை மசூதிகளில் கூட்டுத் தொழுகையும் சேர்ந்து கொண்டதாலும், நான் அன்று காலையில் வள்ளலாரின் ஒளி சூழ்ந்த இறவா உடலின் படத்தையும், *பெத்லாம் மாட்டுத் தொழுவத்தில்* பிறந்த குழந்தை இயேசுவின் படத்தையும், பாண்டிச்சேரி அரவிந்த ஆசிரமத்தின் அன்னை படத்தையும் ஒரு சேரத் தொட்டு – எல்லா மக்களுக்கும் அருள் ஆசி நல்கி எல்லா சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் பிற ஆலயங்களிலும் ஒப்பற்ற அருட்சக்தியின் அருளரசாட்சி நிலைபெற்று ஓங்கவேண்டுமென நான் பிரார்த்தனை செய்து கூடவே அருட்பெருஞ்ஜோதி மந்திரம் ஓதியதாலும் இது நிறைவேறியுள்ளது. இது அருட் பெருஞ்ஜோதிப் பேராண்டவரின் அற்புத அருட் செயலேயாகும். பாபிலோன், கிரீஸ், ரோம் முதலிய பண்டைய நாகரீகங்கள் கொண்டாடி வந்த ஒரு விழாவையே பின்வந்த கிறிஸ்துவ மதம் ஏற்றுக் கொண்டு கிறிஸ்துமஸ் விழாவாக நடத்தி வருகிறது என்பதை நாம் அறிவோம். அரவிந்த ஆசிரமத்து அன்னை தன் ஞானமயப் பேரறிவால் இவ்விழாவை மதச் சார்பற்ற பொது விழாவாக இறை அன்பும் ஆனந்தமும் கொண்ட அருட்ஜோதி

விழாவாக கொண்டாடி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இந்து பத்திரிகை 1998 டிசம்பர் 25 முதல் 1999 ஜனவரி 1ந் தேதி வரை வெளியிட்ட பல தேச சர்ச்சுகள் படங்களிலும் ஜெருசெலம் மசூதி படத்திலும் இப்புது அருட்சக்தி விளங்குவதைக் கண்டு உணரலாம்.)

இதன் பயனாக கோயில்கள், சர்ச்சுகள், மசூதிகள் பிற ஆலயங்கள் இவற்றில் எல்லாம் வள்ளலாரின் அல்லது இறைவனின் சமரச அருட்சக்தி ஒப்பற்று விளங்குவதால் 1998–99 முதலாக முக்கிய விழா நாட்களிலும் மத வழிபாட்டு நாட்களிலும் – உதாரணமாக தீபாவளி, கிறிஸ்துமஸ், புது வருடப்பிறப்பு, வைகுண்ட ஏகாதசி, ரம்ஜான், சிவராத்திரி, திரு ஓணம், ஆருத்ரா, கிருஷ்ணஜயந்தி, ராமநவமி, புத்த பூர்ணிமா முதலிய நாட்களிலும் (மாதப் பூசம் அல்லது புஷ்ய நட்சத்திர நாட்களில் போன்று) ஒப்பற்ற இறை அருட்சக்தி உலகளவில் பரவி எல்லா மக்களுக்கும் ஒரே சீராக அருளை வழங்குகிறது. இதனால் அருளரசாட்சி உலகில் ஓங்கி வளர்ந்து வருகிறது. மனித இனம் முழுவதும் சமரசப் படுத்தி இணைத்து ஒருமைப் படுத்துகிறது.

இவ்வாறு புதுமையான பலவழி முறைகளில் உலக மக்களுக்கு ஆன்ம நேய ஒருமைப்பாடு ஏற்படச் செய்தும் அருளரசாட்சியை சுயமாகவும், நம்மை ஒரு கருவியாக ஆட்கொண்டு பயன்படுத்தியும் வள்ளலார் இயற்றி வருகிறார்.

டி.ஆர். துளசிராம்,
1–1–1999.


---

(1998ல் "ஓம்சக்தி" தீபாவளி மலரிலும், "ஆன்மீகம்" "ஸௌராஷ்டிர மணியிலும் வெளியான கட்டுரை முழுமை பெறுகிறது)

---


வெளியீடு
அரோ - மா- ராமலிங்கம் டிரஸ்டு
33, மஹால் 4வது தெரு, மதுரை - 625 001.

ஸ்ரீ அரவிந்தர்



*1872 – 1950*

ஸ்ரீ அன்னை (1878 – 1973)



5-7-1969 ம் தேதியில்
எடுத்த படம்